## பத்திரிக்கை செய்தி

கடலூர், செம்மண்டலம், குண்டுசாலை, D–3, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு என்ற முகவரியில் வசித்துவரும் கோவிந்தசாமி மகன் திரு. பரணி என்பவர் 18.04.2023 ஆம் தேதி கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனு ஒன்று கொடுத்தார். அந்த புகார்மனுவில் தனது தந்தை பெயரில் உள்ள காலி மனையில் வீடு கட்ட முடிவு செய்துள்ளதாகவும், கட்டட அனுமதி வேண்டி கடலூர் மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் ரகோத்தமன் என்பவரிடம் விசாரித்ததாகவும், அதற்கு அவர் கடலூர் புதுப்பாளையத்தில் உள்ள பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் ஆறுமுகம் என்பவரை சந்திக்குமாறு கூறியதாகவும், அதன்படி புகார்தாரர் பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் ஆறுமுகம் என்பவரை சந்தித்து அவர் மூலமாக கட்டட அனுமதி பெறவேண்டி ஆறுமுகம் மூலமாக ஆன்லைனில் விண்ணப்பம் செய்ததாகவும், பின்னர் ஆறுமுகம், கடலூர் மாநகராட்சியில் E2 பிரிவில் பணிபுரியும் ரகோத்தமன் என்பவரை சந்திக்குமாறு கூறியதாகவும், அதன்படி 12.04.2023 அன்று மேற்படி ரகோத்தமனை சந்தித்தபோது, கட்டட அனுமதி பெறுவதற்கு ரூ.20,000/– பங்கஜம் பிளானர்ஸ் ஆறுமுகத்திடம் கொடுத்தால் அந்த பணம் எங்களுக்கு வந்துவிடும் என்றும், அப்போது தான் தங்களுக்கு கட்டட அனுமதி வழங்கப்படும் என்றும் சொன்னார். புகார்தாரர் லஞ்சம் கொடுத்து கட்டட அனுமதி பெற விருப்பம் இல்லாததால், இன்று (18.04.2023) கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் அவர்களிடம் கடலூர் மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் ரகோத்தமன் மற்றும் பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் ஆறுமுகம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு கொடுத்துக்கொண்டார். அவரது புகார்மனு மீது கடலூர் ஊ.த.க. பிரிவு கு.எண்.6/2023 பிரிவு, 7, 12 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் இன்று 18.04.2023 வாதியிடமிருந்து ரூ.20,000/– லஞ்சபணத்தை பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் ஆறுமுகம் என்பவர் கேட்டு வாங்கியபோது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களது தலைமையிலான லஞ்ச ஒழிப்பு போலீசார் ஆறுமுகம் என்பவரை கைது செய்து லஞ்சப்பணம்

ரூ.20,000/– கைப்பற்றறினர். மேலும் இன்று கடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் E2 பிரிவில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் ரகோத்தமன் என்பவரும் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும் கடலூர் மாநகராட்சியில் பொதுமக்கள் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பம் செய்யும்போது மாநகராட்சி ஊழியர்கள் நேரடியாக பணி செய்யாமல், மேற்படி தனியார் நிறுவனத்தை அனுகுமாறும், மாநகராட்சி ஊழியர்கள் தொடர்ந்து மேற்படி தனியார் நிறுவனம் மூலமாக லஞ்ச பணம் பெறுவதும், மாநகராட்சி ஊழியர்கள் தனியர் நிறுவன உரிமையாளர்களிடம் தொடர்பில் இருப்பதும் தெரியவருகிறது.

மேலும், 15.03.2023 ஆம் தேதி கடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் கட்டட அனுமதி மற்றும் மனை பிரிவுகளுக்கு அனுமதி வழங்க, லஞ்சம் பெறப்படுவதாக கிடைத்த தகவலின்படி திடீர் ஆய்வு செய்து சோதனையில் கடலூரில் உள்ள Pangajam Planners மற்றும் Alpha Associates ஆகிய அலுவலகங்களிலிருந்து மாநகராட்சிக்கு சொந்தமான கோப்புகள் மற்றும் கணக்கில் வராத பணம் ரூ.5,00,000/– கைப்பற்றப்பட்டது. மேலும், கடலூர் நகர் மற்றும் ஊரமைப்புத் துறையால் Pangajam Planners மற்றும் Alpha Associates ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டிருந்த Registered Engineer Grade III உரிமத்தை ரத்து செய்து 17.03.2023 ஆம் தேதி ஆணை பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.